ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 11,586 — 1958 නොවැම්බර් 15 වැනි සෙනසුරාදා — 15.11.1958
11,586 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 திகதி சனிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை இலக்கம் 104

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் டொன் பிலிப் றூபசிங்க குணவர்த்தன, விவசாய உணவு அமைச்சர் ஆகிய யான், இக்கட்டளையால் எவ்வித அரிசியையும் எத்தொகையாயினும் இலங்கையின் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில், அல்லது அவ்விடத்திற்குரிய பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், வழங்கப்பட்ட " பெர்மிட்டோடு " அல்லாது, அல்லது " பெர்மிட்டில் " கொடுத்த நிபந்தனைகளின் பேரிலும் தவிர கொண்டு செல்லவோ அல்லது எடுத்துச் செல்லவோ கூடாது எனத் தடைவிதிக்கிறேன்.

மேற்கூறப்பட்ட இக்கட்டளை பின்வருவனவற்றிற்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

(அ) 400 கொத்துகளுக்கு மேற்படாத உள்நாட்டு அரிசியைக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ;

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் எவ்வித அரிசியையும் எவ்வொருவரோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ;

(இ) அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை வைத்திருக்கும் எவ்வொருவரோ அப் புத்தகத்திலுள்ள கூப்பன் பேரில் பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து தான் வசிக்குமிடத்திற்குக் கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல் ; அல்லது

(ஈ) பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டை அல்லது " பெர்மிட்டை " வைத்திருப்பவர் அல்லது மொத்த அரிசி விற்பனையாளரால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு வைத்திருப்பவர் அப்பற்றுச் சீட்டிலோ " பெர்மிட்டிலோ " பெற்ற அரிசியை வாங்கிய இடத்திலிருந்து அம்மொத்த வியாபாரியினதோ, கூட்டுறவுச் சங்கத்தினதோ அல்லது உத்தரவுபெற்ற வியாபாரியினதோ பற்றுச் சீட்டில் அல்லது " பெர்மிட்டில் " குறிப்பிட்ட பண்டசாலைக்கோ இடத்திற்கோ கொண்டு செல்லல் அல்லது எடுத்துச் செல்லல்.

மேற்காணும் (ஈ) கூட்டில் குறிக்கப்பட்டுள்ள " மொத்த வியாபாரி " என்பதன் பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங் களின் (ஈ) தலையங்கத்தின் III ம் பாகத்தின் 5 ம் பிரமாணத்தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதி காரியால், கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கோ அல்லது கூட்டுறவுக் கடைகளுக்கோ அல்லது உத்தரவுபெற்ற வியாபாரி களுக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட, 1949 ம் ஆண்டின் 21 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்க கூட்டுறவுப் பண்டசாலைகள் சட்டத்தின் 6 ம் பிரிவினால் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதியுடையவருமான ஒருவர்.

மேற்காணும் (ஈ) கூட்டில் குறிக்கப்பட்டுள்ள " உத்தரவுபெற்ற வியாபாரி " என்பதன் பொருள் 1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களின் (ஈ) தலையங்கத்தின் III ம் பாகத்தின் 5 ம் பிரமாணத்தின் கீழ் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால் அல்லது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியால், கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை குறிக்கப்பட்ட இடங்களில் ஸ்தாபனங்களுக்கோ அல்லது குழுவினருக்கோ விநியோகம் செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு வர்த்தகன் அல்லது தகைமை வாய்ந்தவரும் தகுதியுடையவருமான ஒருவராவர்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ந் திகதி.

டீ. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. கே. இ. 40.

உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கேகாலை மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நாகமுத்து புலேந்திரன் ஆகிய நான்—

(1) கீழே குறிக்கப்பட்டுள்ள உணவு விலைக்கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் :—

(அ) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ந் திகதி, வெளிவந்த 11,511 ம் இலக்க விசேட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதியைக் கொண்ட கே. இ. 40 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளை—

(ஆ) மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவைகளைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள உருளைக்கிழங்கு பற்றிய எனது விலைக்கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்—

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த வியாபாரியின் மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக கேகாலை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் ஒரு தடவையில் விற்றல், மொத்த விற்பனை ஆகவே கருதப்படும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆணையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறு ஒரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆணையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும் என ஆணையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆணையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் என ஆணையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விலையோ சில்லறை விலையோ என்பது ;
(உ) பொருளின் விபரங்கள் ;

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின், அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(9) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக் கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 இருத்தல் கழித்துக் கணக்கிட வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(10) சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 இருத்தல் கழித்துக் கணக்கிட வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(11) யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப் பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 இருத்தல் கழித்துக் கணக்கிடவேண்டுமென ஆணையிடுகிறேன்.

(12) மரப்பெட்டிகளில்லாத (கிறேற்ஸ்கள்) மற்றைய எவ்வித கொள்கலத்திலோ இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின், விற்பனை விலை கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(13) இக்கட்டளையின் பொருட்டு "நிகர" என்பது உருளைக் கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறை குறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆணையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ந் திகதி, மு.ப. 11 மணிக்கு கேகாலையில் கையொப்பமிட்டது.

நாகமுத்து புலேந்திரன்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
(உணவு)
கேகாலைப் பகுதி.

**அட்டவணை**

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| உருளைக் கிழங்கு .. .. | 31 01 .. | 0 33 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலையாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.